உ

கடவுள் துணை.

# பார்ச்சலூர்ப்பதிகம்

---

இஃது

எ-மாயாண்டி-நாட்டார்.
கேட்டுக்கொண்டபடி

---

களத்தூர்த்தமிழ்ப்புலவர்
வேதகிரி முதலியார்
குமாரர்
ஆறுமுக முதலியாருடைய
இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடத்தில்
பே — நாராயணசாமிநாட்டார் - அவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

---

இலைடத்தகம்
க - வே - சொக்கலிங்கநாவலரால்
நிறைவேறியது.
காளயுக்தி ௵ கார்த்திகை ௴ - ௯௨.

உ

கணபதி துணை.

# பாய்ச்சலூர்ப்பதிகம்.

## காப்பு.

மூலத்தின்மேலேநின்றுமூன்றுமண்டலமுந்தாண்
டிசீலத்தின்வெளியாய்வந்துசிலம்பொலிபரமான
ந்தக்,கோலத்தின்மேலேநின்றுகுகனை றுமுகனைப்
பாடவாலிடரூபமானவைங்கரன்காப்பதாமே (௧)

## நூல்.

ஓதியநூலும் பொய்யே வுடலுயிர் தானும்
பொய்யே,— சாதியுமொன்றேயாகும் சகலமும்
வேறதாமோ—வேதியன்படைத்ததல்லால் விதித
னைவெல்லலாமோ,—பாதியேபரமேசூழும் பா
ய்ச்சலூர்கிராமத்தாரே........................(௨)

உறக்கமோவுணருள்ளம் வுள்ளமோ புறம்
போசிவன், —இறப்பதுமுன்னோ பின்னேயின்
றஃதுபெண்ணோவாணோ கறப்பது முலையோபா
லோகாண்பதுமனமோகண்ணோ பறப்பதுவிற
கோகாலோ பாய்ச்சலூர்கிராமத்தாரே...... (௨)

வெற்றிலைதாழைவாழைவித்தொன்றுமுளைப்ப
துண்டோபற்றியயோனிடே தம்பாருளோரறிந்தி
டாமல் பெற்றவர்தம்மைத்தேடி பிறந்தறிந்திறந
துபோனோர்பற்றிநின்றலைவதேனோபாய்ச்சலூர்கி
ராமத்தாரே ......................................(௩)

தீப்படக்கடந்தகோலுஞ்சிவனுஞ்சிவன்வே
றேவார்ப்படத்தந்தைதாயார்மக்களுஞ்சுற்றத்தா
ரும்மோர்படக்கடைந்தவெண்ணெய் மோருடன்
கூடாவண்ணம்பார்படத்திரளவேண்டும்பாச்சலூ
ர்கிராமத்தாரே ....................................(௪)

கொக்குமேற்குடுமிகண்டேன் கேழிமேற்
சூடுங்கண்டேன் நெற்குறிவாலுங்கண்டேன் நீரின்
மேல்நெருப்புங்கண்டேன்சற்குலமென்றுசொல்
லிச் சதுர்மறைபேசவேண்டாம் பக்குவமறிந்து
பாரும்-பாய்ச்சலூர்கிராமத்தாரே .........(௫)

வித்தொருமரத்தை யீனும் மரமொருவித் தையீனும்பெற்றதாய்ப்பிள்ளையீனும் பிள்ளையு ம தனையீனு முற்றபாற்றயிராயீனும் உதிரஞ்சுக்கி லத்தையீனும்பற்றிநின்றலைவதேனோ-பாய்ச்சலூ ர்கிராமத்தாரே ...........................(௭)

மதங்கொண்ட தேகந்தன்னை மற்றொருசுத்த ங்காணூர் அகங்கண்டுபறநூங்கண்டுவவனுக் கேதா ரபமாமனல் சுகங்கண்டு துக்கங் ண்டு சுக்கிலவழிபே சென்றுபகங் கொண்டதேனோவென்னிற்-பாய்ச்ச ஊருடன்பார்ப்பார்கூடி வுயர்ந்ததோர்சாலை கட் டி நீரிலேமுழுகிவந்து நெருப்பிலேநெய்யைத்தூ விகார்வயற்றவளைபோலக்கலங்கியவுங்கள் வேதம் பாஷாவிட்ட கன்றதேனோ-பாய்ச்சலூர்.....(௮)

சந்தனமகிலம்வேம்புந்தனித்தனி வாசம்வீசும் அந்தநற்றீயில்வீழ்ந்தாலதன்மணம் வேறதாமோ செந்தலைப்புலையன் வீழ்ந்தாற்றீமணம் வேறதா மோபந்தமுந்தீயும்வேறு- பாய்ச்சலூர்கி (௯)

ஒருபனையிரண்டுபாளையொன்றுநுங்கொன்றுகள் ளு அறிவினிலறிந்தவர்க்குவருவுங்கள்ளிதுவுங்கள் ளொருசெயலைபுயர்ந்ததேனோவொருகுலைதாழ்ந்த தேனோபரடனைப்டழிப்பதேனோ பாய்ச்சலூர்(௰)

பாய்ச்சலூர்ப்பதிகம்-முற்றிற்று